Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR**

Case No. CC.183/2022

**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1 , Page.No.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. சங்கரன் | **தொழில்** | தனியார் வேலை |
| **த/க பெயர்** | திரு. சீனன் | **கிராமம்/ ஊர்** | பள்ளத்தூர் |
| **வயது** | 54 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 23rd day of June 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை–**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரி சம்பத் எனது அண்ணன் ஆவார். கடந்த 27.04.2022 அன்று காலை 11.00 மணியளவில், நான் எனது நிலத்தில் வைத்திருந்த தென்னஞ்செடியை பிடுங்கியது சம்மந்தமாக நான் மற்றும் சரவணன் ஆகியோர் எதிரியின் வீட்டினிடம் சென்று கேட்டபோது நீ எங்கே வேண்டுமானாலும் நடுவாயா என்று என்னை திட்டினார். பின்னர், என்னை அசிங்கமாக திட்டி, தடி மற்றும் கல் ஆகியவற்றால் அடிக்கவந்தார். எதிரி என்னை கல்லால் தாக்கியதில் எனக்கு தலையில் இரத்த காயம் ஏற்பட்டது . பின்னர் நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். அங்கு எனக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்கு தையல் போடப்பட்டது. மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்ததுதான். மேலும், புகார்

வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(அந்த புகார் வாக்குமூலம் என்னால் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. என்னிடம் காட்டப்படும் இது போன்ற கல்லால் தான் எதிரி என்னை தாக்கினார். **(அது அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தென்னஞ்செடிகளை யார் பிடுங்கியது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், எதிரியிடம் கேட்டபோது தான் தான் பிடுங்கியதாக கூறினார். சுமார் 20 வருடங்களுக்கு முன்னரே நான் குடும்பத்தோடு பெங்களூர் சென்று விட்டேன் என்றால் முதலில் நான் மட்டுமே சென்றேன். எனது நிலத்தில் எனக்கு வீடு இல்லை என்றால் சரிதான். அசா.2 சரவணனை நிலத்தை பார்த்துக்கொள்ளுமாறு நான் கூறியிருந்தேன் என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் சம்பவத்திற்கு முன்னர் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. நான் பெங்களூரில் இருந்து ஊருக்கு வந்தால் அ.சா2 ன் வீட்டில் தான் தங்குவேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு சென்று தகவல் தெரிவித்த பின்னர் தான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன் என்றால் சரிதான். மருத்துவமனையில் இருந்து நான் புறப்படும் போது மதியம் 01.30 மணியிருக்கும் என்றால் சரிதான். எதிரியின் வீட்டிற்கு செல்லும் வழியில் மாந்தோப்பு உள்ளது என்றால் சரிதான். நான் எனது நிலத்தில் மாந்தோப்பு வைக்கவில்லை என்றாலும், தவறான தகவலின் அடிப்படையில் நான் சென்றபோது மாமரத்தில் நானே இடித்து கொண்டு ஏற்படுத்தி கொண்ட காயத்தை வைத்து கொண்டு நான் பொய்யான புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Signature of Witness

Judicial Magistrate No.II
Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR**

Case No. CC.183/2022

**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2 , Page.No.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. சரவணன் | **தொழில்** | விவசாயம் |
| **த/க பெயர்** | திரு. பலராமன் | **கிராமம்/ ஊர்** | பள்ளத்தூர் |
| **வயது** | 54 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 23rd day of June 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

***விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 3.17 P.M.***

**முதல் விசாரணை-**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரி சம்பத் எனது பெரியப்பா மகன் ஆவார். அ.சா1 ஐ எனக்கு தெரியும். அ.சா1 தனது நிலத்தில் தென்னஞ்செடியை நட்டு வைத்திருந்தார். அதை எதிரியானவர் பிடுங்கிவிட்டார். தேதி மாதம் நினைவில்லை காலை 11.00 மணியளவில் இது குறித்து அ.சா1, என்னை அழைத்துக்கொண்டு எதிரியின் வீட்டிற்கு சென்று கேட்டபோது, தகாத வார்த்தைகளால் திட்டி, எதிரி கத்தியால் அ.சா1 ஐ தாக்க முற்பட்டதை அவரது மனைவி தடுத்தார். பின்னர் எதிரி அ.சா1 ஐ கல்லால் தலையில் தாக்கியதில் இரத்தகாயம் ஏற்பட்டது. நான் அவரை அழைத்துக்கொண்டு காவல் நிலையம் சென்றேன். அங்கு மருத்துவமனைக்கு

செல்லுமாறு கூறியதால், நான் அவரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். அங்கு அவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்கு தையல் போடப்பட்டது. என்னிடம் காட்டப்படும் இது போன்ற கல்லால் தான் எதிரி அ.சா.1 ஐ தாக்கினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அ.சா1 , 20 வருடங்களுக்கு முன்பு பெங்களூருக்கு சென்று விட்டார் என்றால் சரிதான். கடந்த 8 வருடங்களாக அ.சா1 ன் நிலத்தைநான் தான் பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். அ.சா1 ற்கு தென்னஞ்செடிகள் பிடுங்கப்பட்ட விவரத்தை நான் கூறினேன் என்றால் சரியல்ல. வாதியின் நிலத்திற்கு அருகில் வீடுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். அ.சா1க்கும் எதிரிக்கும் இடையே பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். நான் தான் அ.சா1 ஐ எதிரியின் வீட்டிடம்அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல, அவர் தான் அழைத்து சென்றார். எதிரிக்கு 15 வருடங்களுக்கு முன்பாக கை மணிகட்டில் காயம் ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்துள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கடந்த 6 வருடங்களுக்கும் மேலாக எனக்கும் எதிரிக்கும் முன் விரோதம் உள்ளது என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் இருந்து மருத்துவமனைக்கு செல்லும் போது காவல் நிலையத்திற்கு சென்றோமா என்றால் சென்றோம். ஆனால் அவர்கள் மருத்துவமனைக்கு செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். மருத்துவமனையில் அ.சா1 உள்நோயாளியாக சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் இருந்து 01.00 மணிக்கு மேல் நாங்கள் புறப்பட்டு இருப்போமா என்றால் இருப்போம். வழக்கு சொத்தான கல்லை போலீசாரிடம் நான் எடுத்து கொடுத்தேனா என்றால் இல்லை, போலீசாரே எடுத்துக்கொண்டர். எதிரிக்கும் எனக்கும் முன்விரோதம் இருப்பதால் அ.சா. 1 க்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

***விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 03.35 P.M.***

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Signature of Witness

Judicial Magistrate No.II
Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II TIRUPATTUR**

Case No. CC.NO.183/2022
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 3 Page.No.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. அண்ணாதுரை | **தொழில்** | விவசாயம் |
| **த/க பெயர்** | திரு. பச்சையப்பன் | **கிராமம்/ ஊர்** | பள்ளத்தூர் |
| **வயது** | 65 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 23rd day of June 2026

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

***விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 3.35 P.M.***

**முதல் விசாரணை.-**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும்தெரியாது. சண்டை சம்மந்தமாக என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1–வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கையொப்பங்கள் முறையே என்னால் அ.சா.ஆ.2,3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.).** மேற்படி கையொப்பங்களை நான் காவல்நிலையத்திற்கு வெளியே வைத்து செய்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** - இல்லை

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 03.39 P.M.**

**மறுவிசாரணை – இல்லை**

| |
|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.<br>KOVENDHAN S — JUDICIAL MAGISTRATE NO.II<br>Digitally signed by KOVENDHAN S<br>DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN<br>Location: TIRUPATHUR<br>Signature of Witness — Judicial Magistrate No.II<br>Tirupathur. |

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II TIRUPATTUR**
Case No. CC.NO.183/2022
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 4 Page.No.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. திருநாதன் | **தொழில்** | பெயிண்டர் |
| **த/க பெயர்** | திரு. மாணிக்கம் | **கிராமம்/ ஊர்** | பள்ளத்தூர் |
| **வயது** | 50 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 23rd day of June 2026

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

***விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 3.40 P.M.***

**முதல் விசாரணை.-**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் பெயண்டர் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும்தெரியாது. சண்டை சம்மந்தமாக என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கையொப்பங்கள் முறையே என்னால் அ.சா.ஆ.4,5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.).** மேற்படி கையொப்பங்களை நான் காவல்நிலையத்திற்கு வெளியே வைத்து செய்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -** இல்லை

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 03.39 P.M.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

| |
|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.<br>KOVENDHAN S<br>JUDICIAL MAGISTRATE NO.II<br>Digitally signed by KOVENDHAN S<br>DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN<br>Location: TIRUPATHUR<br>Signature of Witness Judicial Magistrate No.II<br>Tirupathur. |